**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 411 /2022

PW- 4 17-05-2024

| | |
|---|---|
| Name | வேலுச்சாமி |
| Father's/Husband's Name | கணபதி |
| Village | மலைப்பட்டி |
| Taluk | ஓட்டப்பிடாரம் |
| Caste | – |
| Calling | விவசாயம் |
| Religion | – |
| Age | 44 |

(Accused present)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் மலைப்பட்டியில் வசிக்கிறேன். நான் விவசாயம் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள வேலுச்சாமி என்ற கையெழுத்து என்னுடைது. அந்த கையெழுத்தை நான் 02.04.2022 தேதி காலை 7 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்திற்கு போலிசார் வந்து படம் வரைந்தார்கள். அதில் நானும் என் மனைவி ரம்யாவும் சாட்சி கையெழுத்து செய்தோம். **அந்த பார்வைமகசர் முழுவதும் அசா ஆ 2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.**போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எனக்கு சொந்தமாக 7.5 ஏக்கர் நிலம் உள்ளது. அது வானம் பார்த்த பூமியாகும். என்னுடைய வீடு மலைப்பட்டி கீழக்காலனியில் உள்ளது. கீழக்காலனியில் மொத்தம் 11 வீடுகள் உள்ளது. காளிமுத்து வீடு மேலக்காலனியில் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தபோது என் வீடு கீழக்காலனியில் உள்ளது என்று சொன்னேன்.

2) மேலக்காலனியில் மொத்தம் 20 வீடுகள் உள்ளன. காளிமுத்துவின் வீட்டிற்கு மேல் பக்கம் வீடுகள் இல்லை, காடுதான் உள்ளது. காளிமுத்துவின் வீட்டிற்கு கீழ்பக்கம் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் சுரேஷ்குமாரின் வீடு மட்டும் உள்ளது.சுரேஷ்குமாரின் வீட்டிற்கு எதிரே சுடலை வீடு உள்ளது.

3) கீழக்காலனிக்கும் மேலக்காலனிக்கும் இடையே 100 மீட்டர் தூரம் உள்ளது. சுரேஷ்குமாரின் வீட்டிற்கு பின்புறம் 3 வீடுகள் உள்ளது. அசா 1 எனக்கு பெரியப்பா முறை. நான் தோட்டத்திற்கு செல்வதற்கு என் வசதிற்கு ஏற்றார் போல் செல்வேன்.

4) சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேனா என்றால் , ரத்தத்தோடு என் வீட்டிற்கு வந்தார்கள். அந்த சம்பவம் நடந்த அன்றே போலிசார் வந்தார்களா என்றால் இல்லை. போலிசார் வந்து விசாரித்தபோது நானும் என் மனைவியும் மட்டும் இருந்தோம்.

5) சம்பவம் சம்மந்தமாக நான் காவல்நிலையம் செல்லவில்லை. எனக்கு எழுத படிக்கும்ம தெரியும் என்றால் தமிழில் கையெழுத்து போடுவேன் ஓரளவிற்கு வாசிக்க தெரியும். என் மனைவிக்கு எழுத படிக்க தெரியும்.

6) நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் போலிசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றாலும் நான் கையெழுத்து போட்டதாக சொன்னது காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. போலிசார் என்னிடம் வீட்டில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் படம் வரைந்துவிட்டு வாங்கினார்கள்.

7) வழக்கில் பாதிக்கப்பட்ட இசக்கியம்மாள் எனக்கு நெறுங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது நான் ஊரில் இல்லை என்றாலும் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றாலும் சாட்சி கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி